DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.333/2022**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | மருது |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கருமலையான் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.03.2026

2 முதல் 10 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மாட்டுத்தாவணி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 08.07.2022ம் தேதி மாலை 16 மணிக்கு ஆறாவயல் காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது வளங்காவயலைச் சேர்ந்த ஐய்யப்பன் நிலையம் ஆஜராகி எழுத்துப் பூர்வமாக கொடுத்த புகார் மனுவை பெற்று ஆறாவயல் காவல் நிலைய குற்ற எண்.65/2022, இதச பிரிவுகள் 147,294(பி),323,427,506(1) மற்றும் TNPHW Act பிரிவு 4-ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் சம்பவம் இடம் சென்று சாட்சி பட்டியலில் உள்ள 5,6 முன்னிலையில் மாதிரி வரைபடம்

மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். (**மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் சாட்சி பட்டியலில் உள்ள 1 முதல் 6 நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை தேடியபோது எதிரிகள் அனைவரும் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரண் அடைந்துவிட்டார்கள். பின்னர் வழக்கின் புலன்விசாரணையை முடித்து கடந்த 06.09.2022 ம் தேதி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையே சிவில் வழக்குகள் நிலுவையில் உள்ளதை விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. இடம் தொடர்பாக ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி தேவகோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து அறிவிப்பு வந்ததை புகார்தாரர் என்னுடைய விசாரணையில் சொன்னாரா என்றால், இல்லை. சர்வே எண்.137/4 யாருக்கு பாத்தியமான இடம் என்பதை விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. சர்வே எண்.137/4 புகார்தாரருக்கு சொந்தமான இடம் என்று ஆவணங்கள் எதுவும் என்னிடம் விசாரணையில் தாக்கல் செய்தாரா என்றால் ஆமாம், புகார்தாரரின் மனைவி பெயரில் உள்ள ஆவணங்களை கொடுத்துள்ளார். புகார்தாரரின் மனைவி பெயரில் கொடுக்கப்பட்ட ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால், பதிவு செய்யப்படாத ஆவணம். புகார்தாரர் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் பட்டா கேட்டு வழக்கு தாக்கல் செய்த விபரம் பற்றி எனது விசாரணையில் தெரிந்து

கொண்டேனா என்றால், இல்லை. ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி தேவகோட்டை வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்கள் இருந்தபோது நானும் உடன் இருந்தேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.137/4 ல் கல்லுக்கால் ஊன்றிய இடம் வருவாய் கணக்குகளில் வீதி என்று உள்ளதை விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. புகார்தாரர் சம்பவம் நடந்தபோது வீடியோ எடுத்ததாக வீடியோ எதையாவது எனது விசாரணையின்போது ஒப்படைத்தாரா என்றால் இல்லை. புகார்தாரர் அவரது மனைவி பெயரில் தேவகோட்டை சார்பு நீதிமன்றத்தில் என்மீதும் அரசுமீதும் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. புகாரை யார் எழுதினார்கள் என்று என் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் புகார்தாரர்தான் எழுத்து மூலமாக கொடுத்தார். 6ம் எதிரி பூமாதேவி மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் ஆக்கிரமிப்பை அகற்ற கோரி உத்தரவு பெற்றதன்பேரில்தான் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்பதை விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி சம்பவமே நடக்கவில்லை என்றும் அப்படி உண்மையில் நடந்திருந்தால் அ.சா.1 அவர் எடுத்ததாக குறிப்பிடும் போட்டோ மற்றும் வீடியோவை என்னிடம் ஒப்படைத்திருப்பார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் அ.சா.1ற்கும் இருந்த முன்பகையின் காரணமாக கொடுத்த புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முறையாக விசாரிக்காமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

## மறு விசாரணை: இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.